This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஆர்யபட்டா

www.writersujatha.com

## 1

இந்த ஒரு வீட்டின் வாசலிலிருந்து சென்று அதன் மாடி அறைக்குள் நுழைந்தால் சுவரில் ஆனந்தின் படம் தெரியும். ஆனந்தையும் பாரதியையும் கல்யாணக்காட்சியில் காணலாம். ஆனந்த் பட்டம் வாங்குவது, பரிசு வாங்குவது, அவன் படிப்புக்கு அத்தாட்சியான டிப்ளமாக்கள், மெடல்கள், ஆனந்தும் பாரதியும் பிக்னிக் என்று பல படங்கள் சம்பிரதாய சந்தோஷத்தைக் காட்டின. ஆனந்த்தான் இந்தக் கதையின் நாயகன். ஆனால் அவன் இந்த அத்தியாய முடிவுக்குள் இறந்து போகப் போகிறதில் ஆனந்தம் இல்லை. எனவே அவனைப் பற்றி விவரமாகச் சொல்வதற்கு நமக்குச் சமயமில்லை. அவ்வப்போது வைத்துக் கொள்ளலாம். இப்போது அலமாரி நிறைய புத்தகங்களை கவனிக்கவும். குறிப்பாக “Explosives” “The peace Bomb” “physical research” போன்றவற்றை. கோப்பைகள், ட்ராஃபிக்கள் நிரம்பி இருந்தாலும் நடுத்தர வர்க்க வீடு என்பது தெளிவாகத் தெரிந்தது. அவற்றையெல்லாம் பார்த்துவிட்டு மொட்டை மாடிக்கு வரும்போது, நீலவானத்தில் பறக்கும் ஒரு விமானம் பெங்களூர் ஏர்போர்ட்டில் இறங்கும்போது துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டது. ஆனந்த் கண்களில் ஆச்சரியத்துடன் தன் மார்பைப் பிடித்துக் கொண்டு விழுந்தான். மூச்சு முட்டியது. கையை, நம்பிக்கையில்லாமல், அதன் ரத்தத்தைப் பார்த்தான். எதிரே பார்த்தான், அவன் கண்களில் வேதனையும் ஆச்சரியமும் தெரிந்தன.

ஆனந்த் டெலிபோனை நோக்கி மிகுந்த சிரமத்துடன் சென்று அதன் பட்டன்களில் 100 ஒத்தான்.

“போலீஸ் கண்ட்ரோல் ரூம்.”

“சோமு! சோமு!” என்றான் ஆனந்த். அதற்கே மிகுந்த சிரமப்பட்டு, சுவாசப் பையில் காற்று நிரப்பிக் கொள்ள வேண்டியிருந்தது.

“ஹலோ ஹலோ! யார் பேசறது? என்ன விசயம் சொல்லுங்க” என்றது குரல் (கன்னடத்தில்தான்) ஆனந்த் மீண்டும் “சோமு” என்றான்.

“ஹலோ ஹலோ ?” கண்ட்ரோல் ரூமில் அந்தக் காலை அட்டெண்ட் பண்ணவர் புதிதாக சேர்ந்த பயிலுனர். அந்தச் சந்தர்ப்பங்களில் என்ன செய்வது என்பதற்கு அவருக்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை.

“யாரோ ‘சோமு’னு சொல்லிட்டு அப்புறம் பேச்சே இல்லை. மூச்சு மட்டும் கொஞ்ச நேரம் கேட்டுது. இப்ப நின்னு போச்சு.”

உடன் இருப்பவர் ,“லாக் புக்ல டயத்தை நோட் பண்ணிக்க. சோமுன்னு எழுதிக்க. அவ்வளவுதான்” என்றார். மெல்ல மெல்ல ஆனந்த் சரிந்து விழ, அவன் கடைசிக் கணங்களில் அவனுக்கு உதவ யாரும் இன்றி கண்களில் இருள் படியுமுன் அவன் இளம் வாழ்க்கையின் அத்தனை அற்புதக் கணங்களும் ஊர்வலமிட்டன. இங்கே ஓர் அழுகைக்குரல், அங்கே ஓர் ஆனந்த குரல் செக்சுக்குப் பின் முகத்தில் மேலுதட்டில்